<u>புதுச்சேரி அரசு</u>
<u>வணிகவரித்துறை</u>
***

## <u>செய்திக்குறிப்பு</u>

சரக்கு மற்றும் சேவை வரி நாடு முழுவதும் ஜீலை மாதம் 1-ம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் வருடத்திற்கு ரூபாய் 20 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்யும் வணிகர்கள் மட்டுமே கட்டாயமாக பதிவு பெற வேண்டும். ரூபாய் 20 இலட்சத்திற்குள் விற்பனை செய்யும் வணிகர்கள் பதிவு பெற வேண்டிய அவசியமில்லை. விருப்பப்பட்டால் அவர்கள் ஜி.எஸ்.டி.-யில் பதிவு பெற்றுக்கொள்ளலாம். **அனைத்து வணிகர்களும் விற்றுமுதல் வேறுபாடின்றி தாங்கள் நேரடி வியாபார நோக்கத்திற்காக வாங்கும் பொருட்கள் மற்றும் பெறும் சேவைகளின் உள்ளீட்டு வரியினை பெற்றுக்கொள்ளலாம்.**

மேலும், வருடத்திற்கு ரூபாய் 75 இலட்சத்திற்குள் விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளுக்கான இணக்கவரித் திட்டத்தின் கீழ் உணவகங்கள் 5% வரி, உற்பத்தியாளர்கள் 2% வரி, இதர வணிகர்கள் 1% வரி என்ற குறைக்கப்பட்ட வரி விகிதத்தில் வரி செலுத்திடவும், 3 மாதத்திற்கு ஒரு முறை விவரப்படிவங்களை தாக்கல் செய்யவும், வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், குறைந்த வரி விகிதத்தில் வரி செலுத்துவதினால் அவர்களுக்கு உள்ளீட்டு வரிவரவு கிடையாது.

ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் பெரும்பாலான நுகர் பொருட்கள், வாகனங்கள், மின்னனு மற்றும் மின்சாதன பொருட்களின் விலை குறைந்து காணப்படுகிறது. ஆனால், பொதுமக்கள் மத்தியில் ஜி.எஸ்.டி. வரிவிகிதங்கள் விலைவாசி ஏற்றத்தை ஏற்படுத்தும் என ஒரு ஆதாரமற்ற அச்சம் எழுந்துள்ளது. தற்போதைய ஜி.எஸ்.டி. வரி முந்தைய வரி விதிப்பை விட குறைவானதாகவோ அல்லது சமமானதாகவோ தான் இருக்கும். ஜி.எஸ்.டி. வரிவிதிப்பினால் ஒரு பொருள் உற்பத்தியாகி அது நுகர்வோர் கையில் சென்றடையும்பொழுது அதன்மேல் விதிக்கப்படும் வரியானது முந்தைய வரிவிதிப்பைவிட குறைவாகவே இருக்கும். உதாரணத்திற்கு இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பெரும்பாலும் விலை குறைந்திருப்பதைக் காணமுடிகிறது. அதேபோல் பற்பசை, சோப், டிடர்ஜென்ட் பவுடர், பிளாஸ்டிக் பொருட்கள், மின்னணு மற்றும் மின்சாதன பொருட்கள் மற்றும் பல பொருட்களின் விலை குறைந்துள்ளது.

உதாரணத்திற்கு,

ஜி.எஸ்.டி.-க்கு முந்தைய வரிவிதிப்பில் ஒரு பிஸ்கெட்டின் அடிப்படை விலை ரூ.100/- ஆக இருக்கும்பட்சத்தில் அதன் மீதான மத்திய கலால்வரி 6% விதிக்கப்பட்டது. ஆகவே, அந்த பொருளின் அடக்கவிலை ரூ.106/- ஆக இருந்தது. அதன்மீது வாட் வரியாக 14.5% விற்பனையின் போது விதிக்கப்பட்டது. ஆதலால் நுகர்வோர் அப்பொருளை ரூ.121.37 கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருந்தது. அதேபொருளானது ஜி.எஸ்.டி. வரி விதிப்பின்கீழ் வரும்பொழுது, அதன் அடிப்படை விலை ரூ.100/- ஆக இருக்கும் பட்சத்தில் அதன் மீது 18% வரிவிதிக்கப்படும் போது அப்பொருளின் விலை ரூ.118/-ஆக இருக்கும். அதாவது, அந்த பொருளின் இறுதி விலையில் ரூ.3.37 குறைவாக விற்கப்படும்.

இதே போல் ஏனைய பொருட்களின் விலை குறையும் போது, உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் அந்த பொருட்களின் விலையை மாற்றியமைத்து, பழைய விலையை மறைக்காமல் புதிய விலையையும் காண்பிக்க வேண்டும். ஆகவே, பொதுமக்களும், நுகர்வோரும் விலையேற்றத்தைப் பற்றி ஊடகங்களில் பரப்பப்படும் பொய்யான வதந்திகளை நம்பத் தேவையில்லை. மேலும், எந்த ஒரு பொருட்கள் மற்றும் சேவைகளின் மீதான வரி விதிப்பு முறை மற்றும் அவற்றுக்குண்டான வரி விகிதங்களை பற்றி சந்தேகம் இருந்தால், வணிகவரித்துறையை அணுகி சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளுமாறு வணிகர்கள் மற்றும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

18.7.2017

ஆணையர் (வவ)

இடம்: புதுச்சேரி

தேதி: 18-07-2017